பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 19 ஞாயிற்றுக்கிழமை 31.01.2021 கதிர் 318

## மிருகக்காட்சி சாலைகள் நாளை மீண்டும் திறப்பு!

கொரோனா வைரஸ் தொற்றால் மூடப்பட்ட தேசிய மிருகக்காட்சி சாலைத் திணைக்களத்தின் கீழ் உள்ள தெஹிவளை மிருகக் காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக் காட்சிசாலை மற்றும் ரிதிகம சஃபாரி பூங்கா ஆகியவை நாளை முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

☞ 2

# ஜெனிவாவில் இலங்கையை பாதுகாக்க சீனா பிரயத்தனம்

## உள்ளக விடயங்களில் வெளிநாடுகள் தலையிடவே கூடாது; சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜனவரி 31

சர்வதேச அரங்கில் உள்ள எந்தவொரு நாட்டினதும் உள்ளக விடயங்களில் பிற நாடுகள் தலையீடு செய்வதற்கு இடமளிக்க முடியாது என்பதே மக்கள் சீனக் குடியரசின் நிலைப்பாடாகும். இதனை அடியொற்றியதாகவே ஜெனிவாவிலும் எமது முடிவும் செயற்பாடும் இருக்கும்.

– இவ்வாறு இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவரும் ஊடகப் பேச்சாளருமான லு சொங் தெரிவித்தார்.

அந்தவகையில் மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள், இன முரண்பாடுகளுக்கான தீர்வுகள் என்பவை இலங்கையின் உள்ளக விடயங்களாகும். இதில் மக்கள் சீனக் குடியரசு ஒருபோதும் தலையீடு செய்யாது. ஏனைய நாடுகள் தலையீடு செய்வதையும் விரும்பாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

☞ 2

## சுவருடன் மோதுண்டு சுக்குநூறானது வான் மூவர் சம்பவ இடத்திலேயே பரிதாப மரணம்



கொழும்பு - மினுவாங்கொட பிரதான வீதியின் ஏக்கல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

வான் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த சுவருடன் மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

☞ 2

### இராஜாங்க அமைச்சர் விதுர தலைமையில்

## குருந்தூர் மலை விடயம் குறித்து நாளை முக்கிய கலந்துரையாடல்

முல்லைத்தீவு - குருந்தூர் மலை மற்றும் படலைக்கல்லு (கல்யாணிபுர) ஆகிய பகுதிகளில் தொல்பொருள் ஆராய்ச்சிகள் முன்னெடுப்பதற்கான பூர்வாங்கச் செயற்பாடுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அங்கு தமிழ் மக்களின் பூர்வீக அடையாளங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் தொல்லியல்

☞ 2

## விமல் தலைமையில் ஆளும் தரப்பில் 10 கட்சிகள் அரசுக்கு எதிர்க்க முடிவு

கொழும்பு, ஜன. 31

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நூறு வீத உரிமமும் துறைமுக அதிகார சபை வசமே இருக்க வேண்டும். இந்தியாவுக்கோ அல்லது வேறு எந்தத்தரப்பினருக்கோ சிறிதளவேனும் விட்டுக்கொடுக்க முடியாது.

- இவ்வாறு ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் பத்து அரசியல் கட்சிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

துறைமுகத்தைப் பாதுகாக்கும் முழுமையான முயற்சியைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம்

☞ 2


## தொல்லியல் திணைக்கள அடுத்த இலக்கு கிளிநொச்சி உருத்திரபுரீசுவரர் ஆலயம்!

கிளிநொச்சி, ஜன. 31

கிளிநொச்சி மாவட்டம் உருத்திரபுரம் பகுதியில் உள்ள உருத்திரபுரீசுவரர் ஆலயச் சூழலிலும் தொல்லியல் அடையாளம் இருப்பதாகக் கூறி தொல்லியல் திணைக்களம் ஆராய்கிறது.

கிளிநொச்சி உருத்திரபுர சிவன் ஆலயத்துக்கு அருகில் தொல்லியல் அடையாளங்கள் இருக்கின்றன எனக் கூறி அகழ்வாராய்ச்சி மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தொல்லியல்

☞ 2



## சுகாதார வழிகாட்டல்களை மீறிய குற்றச்சாட்டில் 2,905 பேர் மாட்டினர்

முகக்கவசம் அணியாமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறியமைக்காக இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 52 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 905 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

☞ 2

## 31 ஆயிரம் கொரோனா தடுப்பூசிகள் ராணுவத்தினருக்கு ஒதுக்கி வைப்பு!

கொழும்பு, ஜன. 31

கொவிட்- 19 வைரஸ் பரவலில் முன்னிலையிலிருந்து செயற்படும் இராணுவ வீரர்களுக்கு வழங்குவதற்கான ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரசெனேகா தடுப்பூசிகள் இராணுவ வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினருக்காக 31 ஆயிரம் தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

☞ 2

## ரத்மலான அஞ்சுவின் சகா ஒருவர் கஞ்சாவுடன் வசமாகச் சிக்கினார்!

பாதாளக் குழு உறுப்பினரான சிங்ஹாரகே அமல் சமிந்த தி சில்வா எனப்படும் 'ரத்மலான அஞ்சு' என்ற சந்தேகநபரின் சகா ஒருவர் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவ - லுனாவ பகுதியில் இன்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

லுனாவ பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 7 கிலோ 57 கிராம் கஞ்சா மற்றும் 5 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

## இலங்கையின் நிலைப்பாட்டை ஜெனிவாவில் வெளிப்படுத்த புதிய பிரேரணையே வேண்டும்

### கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா வலியுறுத்து

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை இலங்கை அரசு களைவதற்கு, போர் நிறைவின் பின்னரான படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகள் முதல் ஆணைக் குழுக்களின் அறிக்கைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக நீதிபதி தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழு வரையிலான உள்ளகச் செயற்பாடுகளை குறிப்பிட்டுக் கூறும் புதிய பிரேரணையொன்றே தற்போதைய சூழலில் அவசியமாக உள்ளது.

-இவ்வாறு சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்தரணியுமான கலாநிதி.

☞ 2



## இலங்கையின் நிலைப்பாட்டை ஜெனிவாவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை தொடர்பான மீளாய்வு அறிக்கையை சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டிருக்கின்றார். இதனை எதிர்வரும் 24ஆம் திகதி ஜெனிவா அமர்வில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்தநிலையில் அவர் இம்முறை வெளியிட்டுள்ள அறிக்கையில் முதலில் சிவில் நிர்வாகத்தில் 28 படை அதிகாரங்களை இணைத்துக்கொள்ளப்பட்டமை தொடர்பில் கூறியுள்ளார்.

அத்துடன், 20ஆவது திருத்தச் சட்டத்தால் ஏற்பட்டுள்ள அதிகாரக் குவிப்பு மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாமல் போனமை, அரசமைப்பில் உள்ள உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளமை, இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30.1தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படாமை, விசேடமாக கலப்புபொறிமுறையுடான நீதி விசாரணை முன்னெடுக்கப்படாமை ஆகிய-வற்றையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவற்றில் இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கை கடந்த காலங்களில் வெளியான அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் வித்தியாசமானதுதான். இதனை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். இல்லாது விட்டால் கொரோனா நெருக்கடியையும் விடவும் மிகவும் ஆபத்தான நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமைகள் உருவாகி விடும்.

இலங்கையில் நல்லிணக்கத்தை மீளக் கட்டியெழுப்புதலில் காணப்பட்ட குறைகளை அடிப்படையாக வைத்தே இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, வடக்கு, கிழக்கு மக்களுடான மீளிணக்க விடயங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. இந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகளை மையப்படுத்தாது அரசு நேரடியாகத் தமிழ் மக்களுடனான ஊடாட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அண்மையில் யாழ். பல்கலைக் கழகத்தில் நினைவுத்தூபி உடைக்கப்பட்டமையும் பின்னர் அது நிர்மாணிக்கப்பட்டமையும் அரசின் மாறுபட்ட நிலையை வெளிப்படுத்தியுள்ளது. அதுபோன்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை உட்பட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராய்வதற்காக நீதிபதி தலைமையிலான மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இத்தகைய விடயங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். ஜெனிவா வதிவிடப் பிரதிநிதி ஊடாக உரியபிரசாரங்களைஉறுப்புநாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

அதேநேரம், இலங்கை சார்பில் இம்முறை பிரிட்டன், கனடா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளே பிரேரணையைக் கொண்டுவரவுள்ளன. அந்த நாடுகளிடத்தில் மேற்படி விடயங்களை வெளிப்படையாக கலந்துரையாடுவதன் ஊடாக இணக்கப்பாடொன்றை ஏற்படுத்த முடியும்.

அவ்விதமான முயற்சிகளுக்கு அப்பால், உள்நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும்மேற்படிவிடயங்களைமையப்படுத்தி இலங்கை தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் பிரேரணையொன்றைக் கொண்டுவர முடியும்.

சீனா, பாகிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகள் இணை அனுசரணை நாடுகள் அல்லாத மேற்குலக நாடுகள் ஆகியவற்றின் ஆதரவைக் கோர முடியும். விசேடமாக காஷ்மீர் பிரச்சினையில் நெருக்கடியில் இருக்கும் இந்தியாவின் ஆதரவையும் இலங்கை கோர முடியும். இந்தியாவின் ஆதரவைப் பெறுவதால் கணிசமான மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன. - என்றார்.

## சுகாதார வழிகாட்டல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித்ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு இணங்காத நபர்களைக் கண்டறிவதற்கான விசேட நடவடிக்கை நாடு முழுவதும் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

## சுவருடன் மோதுண்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

48, 49 மற்றும் 64 வயதுகளையுடைய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் வாகனம் முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

## குருந்தூர் மலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் விகாரை அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் அபாயமுள்ளது எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளின்போது யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துறைசார்ந்தவர்களையும் இணைத்துக்கொள்ளுமாறு தமிழ் அரசியல், சிவில் பிரதிநிதிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நாளை திங்கட்கிழமை, இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் தொல்லியல் துறை அதிகாரிகள் கலந்துகொள்ளும் முக்கிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தரப்பு துறைசார்ந்தவர்களை குருந்தூர் மலை அகழ்வாராய்ச்சிகளின்போது, ஈடுபடுத்துவது தொடர்பில் தீர்மானிக்கப் படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

## தொல்லியல் திணைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தினர் அண்மையில் குறிப்பிட்டனர் என அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று நண்பகல் வேளையில் அப்பகுதிக்கு பௌத்த தேரர் ஒருவர் வருகை தந்தார் எனவும் அவர் வந்து சென்ற சில மணித்தியாலங்களின் பின்னர் அப்பகுதிக்கு பொலிஸார் வந்தனர் எனவும் அதனைத் தொடர்ந்து மாலை வேளையில் இராணுவத்தினரும் வருகை தந்து அவ்விடத்தை பார்த்துச் சென்றனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தொல்லியல் திணைக்களம் குறித்த சிவன் ஆலயச் சூழலை இலக்கு வைத்துள்ள நிலையில் பௌத்த பிக்கு, பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் என வரிசையாக திடீரென வந்து ஆராய்ந்து சென்றுள்ளமை தொடர்பில் அப்பகுதியில் பரபரப்பான நிலை காணப்படுகிறது.

ஏற்கனவே தொல்பியல் திணைக்களத்தால் அப்பகுதி அடையாளம் காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவாவில் இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் மனித உரிமைகள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன எனவும், அதடினப்படையில் சில நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மார்ச் மாதக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் இலங்கை குறித்த மீளாய்வு அறிக்கையில், இலங்கை அபாயரகமான பாதையில் பயணிக்கின்றது எனவும், அதேநேரம், ஏற்கனவே நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலைச் செய்வதற்குச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதுள்ளிட்ட பல விடயங்களைக் குறிப்பிட்ட காட்டமான உள்ளடக்கங்கள் காணப்படுகின்றன. இதுபற்றிய மக்கள் சீனக் குடியரசின் நிலைப்பாடு என்னவாக உள்ளது என்றும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் இணை அனுசரணை நாடுகளால் புதியபிரேரணைகொண்டுவரப்படவுள்ள நிலையில் அதன் மீதான வாக்கெடுப்பில் மக்கள் சீனக் குடியரசு எவ்விதமான பிரதிபலிப்பைக் காட்டப்போகின்றது என்றும் வினவியபோதே இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவருமான ஊடகப் பேச்சாளருமான லுசொங்மேற்கண்டவாறுகூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீங்கள்எழுப்பிய இரண்டுவினாக்கள் தொடர்பில் எமது நிலைப்பாடு மிகவும் தெளிவாக உள்ளது. முதலாவதாக, மனித உரிமைகள், இனமுரண்பாடுகளுக்கான தீர்வுகள் தொடர்பான விடயங்கள் இலங்கையின் உள்ளகவிடயமாகும். இலங்கை இறைமை உள்ள நாடு என்ற வகையில் இந்த விடயத்தில் பிற தரப்புக்கள் தலையிடுகின்றமை பொருத்தமற்றதாகும்.

எம்மைப் பொறுத்தவரையில் மக்கள் சீனக் குடியரசின் உள்ளக விடயங்களில் பிறநாடுகள் தலையீடுகளைச் செய்வதை விரும்புவதில்லை. அதற்கு இடமளிப்பதும் இல்லை. அதுபோன்றே உலகில் உள்ள எந்தவொரு நாட்டினதும் உள்ளக விடயங்களில் பிற நாடுகளோ அல்லது சக்திகளோ தலையீடு செய்வதற்கு இடமளிக்கமுடியாது. இதனைஅடியொற்றியதாகவே ஜெனிவாவிலும் எமது நிலைப்பாடு அமையும்.

அடுத்ததாக, மனித உரிமைகள் விடயமானது இறைமையுள்ள ஒவ்வொரு நாடுகளாலும் பின்பற்றப்படும் விடயமாகும். இந்த விடயம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு அரசியல் மயப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் விடயத்தை நாடொன்றுக்கு எதிராக ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது.

இதேவேளை, இலங்கை விவகாரம், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு அனுப்பப்பட்டு செயலாளர் நாயகத்தின் பரிந்துரையில் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புவதற்காக அனுப்பப்படுகின்றபோது, சீனா தனது வீட்டோவைப் பயன்படுத்துமா என்று வினா எழுப்பியபோது, அவ்வாறான நிலைமை ஏற்படும் என்று தெரியவில்லை. இருப்பினும் நான் மேற்குறிப்பிட்ட நிலைப்பாடே இந்த வினாவுக்கும் பொருந்தும் என்றும் தெரிவித்தார்.

## மிருகக்காட்சி சாலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு திறக்கப்படும் மிருகக்காட்சி சாலைகள் மற்றும் பூங்காக்களில் கடுமையான சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் அமுல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் உள்ளூர் மற்றும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் ஒரே நாளில் அல்லது ஒரே நேரத்தில் பார்வையிட அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 31 ஆயிரம் கொரோனா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு -

பலாலி, அநுராதபுரம், மன்னார், வவுனியா, மின்னேரியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, கொழும்பு, தியத்தலாவை ஆகிய இராணுவ வைத்தியசாலைகளுக்கும் , அம்பாறையிலுள்ள இராணுவ கம்பெட் பயிற்சிவிப்புக்கல்லூரி, பனாகொடை முதலாவது இலங்கை இராணுவ வைத்தியப் படையணி, 11 ஆவது படைப்பிரிவின் சிகிச்சை நிலையம், 22 ஆவது படைப்பிரிவின் சிகிச்சை நிலையம், 61 ஆவது படைப் பிரிவின் சிகிச்சை நிலையம் ஆகியவற்றுக்கும் தலா 500 வீதம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

பலாலிஇராணுவவைத்தியசாலைக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவிருந்த படையினருடன் கலந்துரையாடினார்.

இராணுவத்தினருக்காக ஒதுக்கப்பட்ட 31 ஆயிரம் தடுப்பூசிகளை ஜனவரி 30 ஆம் திகதியிலிருந்து 3 நாள்களுக்குள் வழங்கிநிறைவு செய்ய இராணுவ வைத்தியக் குழு எதிர்பார்த்துள்ளது.

நாராஹேன்பிடவில் உள்ள கொழும்பு இராணுவ வைத்தியசாலை, பனாங்கொடையிலுள்ள இராணுவ வைத்திய சாலைகளின் இராணுவ மருத்துவ குழுவினரால் கொவிட் - 19 தடுப்பு போராட்டத்திலுள்ள 1000 வீரர்களுக்கு கடந்த வெள்ளியன்று தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

## விமல் தலைமையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் அக்கட்சிகளின் தலைவர்கள் உறுதியளித்துள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாகப் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள நிலையில் ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் பத்து அரசியல் கட்சிகள் நேற்று ஒன்றிணைந்து இதுதொடர்பாக பேச்சுகளை முன்னெடுத்திருந்தன.

இந்தப் பேச்சுகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் இந்தச் சந்திப்புக்கு அமைச்சர்களான உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸவிதாரண உள்ளிட்ட பத்து கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும்நாடாளுமன்றஉறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சு தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ஸ கருத்துத் தெரிவிக்கையில் -

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை மீட்கும் போராட்டத்தில் துறைமுக தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து போராடி வருகின்றன. எனவே, தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய அரசியல் கட்சி உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கலந்து ரையாடினோம்.

எம்மைப் பொறுத்தவரை கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம் முற்றுமுழுதாகத் துறைமுக அதிகார சபையின் வசமே இருக்கவேண்டும். இதனை இந்தியாவுக்கோ அல்லது வேறு எந்த நாட்டுக்கும் உரித்தாக்கும் அல்லது அதிக பங்கை வழங்கும் வகையில் ஏதேனும் நடவடிக்கை அரசால் எடுக்கப்படுமாயின் அதை நாம் முழுமையாக எதிர்ப்போம் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

அரசில் அங்கம் வகிக்கும் பத்து கட்சிகள் ஒன்றிணைந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளமையால் கொழும்புத் துறைமுகம் முழுமையாக துறைமுக அதிகார சபையின் கீழ் இருக்க வேண்டும் என்றஅழுத்தத்தைப்பிரயோகிக்கவுள்ளோம்.

இதில் ஒரு சிறிய அளவு உரிமத்தைக் கூட வேறு எந்தத் தரப்பினருக்கும் கொடுக்கக் கூடாது. எதிர்காலத்திலும் நாம் இதற்காகக் குரல் கொடுப்போம். அதேபோல் அரசைப் பாதுகாக்கவும், ஜனாதிபதியைப் பாதுகாக்கவும் நாம் நடவடிக்கை எடுப்பதுடன் இந்த நாட்டின் நலன்களுக்காகவும் ஒன்றிணைந்துள்ளோம். - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு —
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தீர்க்கதரிசனம் இல்லாத் தீர்மானம்

**அரசியல் தலைவர்களின் தகைமை, தகுதி, பெருமை, சிறப்பு போன்றவை எல்லாம் அவர்களின் தீர்க்கதரிசனத்தில்தான் அளவிடப்படுகின்றன.**

**நமது அரசியல் தலைமைகளிடம் – தமிழ்த் தலைவர்களிடம் – அத்தகைய தூரதிருஷ்டி நோக்கு அறவே இல்லை என்பதுதான் வேதனையான விடயம். அதனால்தான் தமிழினம் இத்துணை துன்ப துயரங்களை, சொல்லொணா நெருக்கடிகளை எதிர்கொண்டு பரிதவிக்கின்றது என்பது திண்ணம்.**

**இலங்கை, சுதந்திரம் பெற்ற காலத்துக்கு முன்பிருந்தே இலங்கைத் தீவில் தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்தமையே வரலாறாகப் பதிவு செய்யப்படுகின்றது.**

**இந்த அனுபவத்தைப் பட்டுத் தெளிந்த நமது தமிழ்த் தலைவர்கள் எல்லாம் 'நம்ப நட; நம்பி நடவாதே!' என்று ஏனையோருக்கு அறிவுரை கூறுவர். ஆனால் கடைசியில், 'அறப்படித்த பல்லி கூழ்ப்பானைக்குள் வீழ்ந்த மாதிரி' தாங்கள் நம்பி நடந்து, ஏமார்ந்தமையைத் தாம் எமது வரலாறாக எமக்கு விட்டுச் செல்வர்.**

**தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்களாகத் தமிழர்களை வழி நடத்திய – வழி நடத்துகின்ற – மூத்த தலைவர் சம்பந்தன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் இணை கூட இதற்கு விதிவிலக்கல்லர்.**

**2015 இல் தாமும் சேர்ந்து கொண்டு வந்த மைத்திரிபால சிறிசேனாவை ஜனாதிபதியாக்கி, அவரின் கீழ் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்ட அரசு அமைந்த போதும் கூட அப்படித்தான் கூறினார்கள். 'நம்ப நடக்கின்றோம், நம்பி நடக்கவில்லை' என்றார்கள். ஆனால் கடைசியில் நடந்தது என்ன?**

**நம்பி நடந்தமையால் நட்டாற்றில் விடப்பட்டோம், அப்போதும்தான் நம்பி நடந்தமையால் மீண்டும் ஒரு தடவை ஏமாற்றப்பட்டுள்ளோம் – என்ற உண்மை கடைசியாக எமக்கு உறைப்பாக உறைத்தது.**

**இந்தப் பின்புலத்தில்தான் நேற்று வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறிய கருத்துக்களை நாம் நோக்க வேண்டும்.**

***"இலங்கையின் சுதந்திர தினத்தை நாம் தொடர்ந்து புறக்கணித்து வந்துள்ளோம். கடந்த அரசாங்கம் சிறு நல்லெண்ண சமிக்ஞைகளைக் காட்டிய போதும் நாமும் அதில் (சுதந்திர தின நிகழ்வுகளில்) கலந்து கொண்டோம். எனினும் அந்த அரசாங்கமும் எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்தே செயற்பட்டிருக்கின்றது. எனவே நாம் தொடர்ந்து சுதந்திர தினத்தைப் புறக்கணிப்போம்."*** **என்று கூறினார் அவர். விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்ற மாதிரியான சமாளிப்பு விளக்கம் இது.**

**இலங்கையின் சுதந்திர தினம் என்பது ஏற்கனவே இப் பத்தியில் நாம் குறிப்பிட்ட மாதிரி, அந்நியப் படையெடுப்பாளர்களினால் வல்வந்தமாகப் பிடுங்கப்பட்ட தமிழர் தேசத்தில் இறைமை, சில நூற்றாண்டுகளின் பின்னர் அந்நியத் தரப்பான பிரிட்டிஷரினால் சிங்களவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட குறியீட்டுத் தினமேயன்றி, அது தமிழர் தரப்பு கொண்டாடும் தினம் அன்று.**

**தமிழினத்தை அடிமைப்படுத்திய எஜமானர்கள், தமது எஜமான் அதிகாரத்தை தங்களுக்குள் மாற்றிக் கொண்டமையைக் குறிக்கும் தினம்தான் இது.**

**அந்த வகையில் பார்த்தால் இது தமிழர்களுக்கு சுதந்திர தினமே அல்ல. உண்மையில் அடிமைப்படுத்திய நாள்.**

**அதனை நன்கு தெளிவாக – உறுதியாக – உணர்ந்தமையாலேயே இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர்கள் கரி நாளாக அனுஷ்டிக்க வேண்டும் என்று கோரினார் தந்தை செல்வா.**

**தந்தை செல்வாவின் காலத்துக்குப் பின்னர் தளபதி அமிரும் தமிழர் விடுதலைக் கூட்டணியை அத்திசையில்தான் நகர்த்தினார். அதனால் அவரது கட்சி – தமிழர் விடுதலைக் கூட்டணி – எழுச்சி பெற்றது.**

**காலம் காலமாக இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர் தரப்பு கரிநாளாகக் கொண்டாடும்போது திடீரென ஒரு நாள் அதனை மறந்து, தம்பாட்டில் பட்டு வேட்டி, சட்டை, உத்தரியத்துடன் சுதந்திர தினத்துக்கான பிரதான நிகழ்வில் காட்சி தந்தார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன். அடுத்த தடவை சுமந்திரன் பிரசன்னமானார்.**

**இப்போது மீண்டும் கரிநாளாக அனுஷ்டிப்போம் என்ற விளக்கம். நாங்கள் நம்பி நடந்து ஏமாறிய வரலாற்றின் – சரித்திரச் சறுக்கலின் – பிரதிபலிப்பு இது.**

**நல்லாட்சி அரசு முன்னெடுத்ததாகக் கூறப்படும் தீர்வு முயற்சிகளில் நாமும் நேர்மையுடன் உள்ளோம் என்ற நல்லெண்ண சமிக்ஞையைக் காட்ட இந்த முடிவை சம்பந்தன் – சுமந்திரன் இணை எடுத்திருக்கலாம்.**

**ஆனால், தந்தை செல்வா பல தசாப்தங்களுக்கு முன்னர் எடுத்து, நடைமுறைப்படுத்தி வந்த கரிநாள் தீர்மானம் என்ற முடிவை மாற்றி, நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டுவதற்கு, அது பற்றிய நடவடிக்கையை தான்தோன்றித்தமான – எதேச்சாதிகாரம் போன்று – தம்பாட்டில் தனித்து எடுக்காமல் கூட்டமைப்பின் பிற தலைவர்களோடு ஆலோசித்து சம்பந்தன் – சுமந்திரன் இணை எடுத்திருக்குமானால் இன்று அது தீர்க்கதரிசனமற்ற – தூரப் பார்வையற்ற – தனிமனித அரசியல் முடிவு என்ற விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்காது.**

## பொலிஸ் வைத்தியசாலை நிர்வாகப்பிரிவுக்கு இன்று தடுப்பூசி என்கிறார் அஜித் றோஹண!



இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரசெனிகா கொவிட் – 19 தடுப்பூசிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸ், வைத்தியசாலையின் நிர்வாகப்பிரிவினருக்கு வழங்கப்படுகின்றன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் கூறிவை வருமாறு:–

அஸ்ட்ரசெனிகா கொவிட் – 19 தடுப்பூசிகள் வைத்திய பிரிவினருக்கும், இராணுவத்தினருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பொலிஸ், வைத்தியசாலையில் நிர்வாகப்பிரிவினருக்கும் வழங்கப்படுகின்றது.

கண்டி – குண்டசாலை பகுதியில் அமைந்துள்ள பொலிஸ், வைத்தியசாலையின் நிர்வாகப்பிரிவினருக்கும் பெப்ரவரி 2 ஆம் திகதி தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அம்பலாங்கொடை கிராமிய வங்கி கொள்ளை; விமானப்படை சிப்பாயிடம் கைக்குண்டுகள் மீட்பு!

அம்பலாங்கொட பகுதியில் கிராமிய வங்கி ஒன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் விமானப்படை சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளமையோடு அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

அம்பலங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதம்பே பகுதியில் அமைந்துள்ள கிராமிய வங்கியொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு லட்சத்து 36 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டிருந்தது. இனந்தெரியாத நபரொருவர் வங்கியின் முகாமையாளரை கைகுண்டு மற்றும் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி இவ்வாறு பணத்தை கொள்ளையிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவத்தின் போது விரைந்து செயற்பட்ட பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் உடனே சந்தேக நபரை மடக்கிப்பிடித்திருந்தனர். இவ்வாறு பணத்தை கொள்ளையிட்ட நபர் சீனக்குடா விமானப்படை முகாமின் சிப்பாய் ஒருவர் என்று தெரியவந்துள்ளது. சந்தேக நபரைக் கைது செய்துள்ள பொலிஸார், அவரிடமிருந்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கைக்குண்டுகள் இரண்டு, விளையாட்டு துப்பாக்கி மற்றும் கொள்ளையிட்ட பணம் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

அம்பலங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இந்தியத் தடுப்பூசி உள்நோக்கம் கொண்டது என்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது!

### பிமல் ரத்நாயக்க காட்டம்



இந்தியா இலங்கைக்கு தடுப்பூசி வழங்கியமை, உள்நோக்கமாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இந்தியாவால் இலங்கைக்குத் தடுப்பூசி வழங்கியமையானது எந்தவித பிரதி உபகாரம் இல்லாமலோ அல்லது எந்தவித உள்நோக்கம் இன்றி வழங்கியிருந்தால் அதனை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், இலங்கை துறைமுகத்தை பெற்றுக்கொள்வதற்காகதான் இந்த தடுப்பூசியை வழங்கியிருந்தால் அதனை நாங்கள் சாதகமாக ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு இருந்தால் இந்தச் செயற்பாட்டை நாங்கள் ஓர் உள்நோக்கம் கொண்டதாகவே பார்க்கிறோம்.

இவ்வாறான செயற்பாடுகளை இந்தியா மேற்கொள்ளக் கூடாது. இதேவேளை, இந்தச் செயற்பாட்டுக்கு இலங்கை அரசாங்கமும் உடந்தையாகப் போகக் கூடாது.

இலங்கையில் எந்த பகுதியாக இருந்தாலும் சரி குறிப்பாக அம்பாந்தோட்டையை சீனாவிற்கு வழங்கியமை, அதேபோன்று கொழும்பு துறைமுகத்தை வழங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே நாங்கள் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வவுனியாவில் ஒரேநாளில் 905 பேருக்குத் தடுப்பூசி!



வவுனியாவில் ஒரே நாளில் 905 பேருக்கு கொவிட்19 தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட கொவிட் – 19, 'கொவிஷெல்ட்' தடுப்பூசிகள் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஊழியர்கள்கள் மற்றும் இராணுவத்தினருக்கு ஏற்றும் பணி கடந்த சனிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 700 டோஸ்கள் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டன. அதனைச் செலுத்தும் பணிகள் வவுனியா வைத்தியசாலை மற்றும் வன்னி பாதுகாப்பு படைத்தலைமையகத்தில் சனிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது 297 பேர் வவுனியா வைத்தியசாலை சார்ந்தவர்களுக்கும் 108 பேர் சுகாதாரத் துறை சார்ந்தவர்களுமாக 405 பேருக்கு வவுனியா வைத்தியசாலையிலும், 500 இராணுவத்தினருக்கு வன்னி பாதுகாப்பு படைத்தலைமையகத்திலும் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

# இயக்குநர் சங்கருக்கு பிடியாணை உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு!



சங்கர் இயக்கத்தில் நடிகர் ரஜினி காந்த், ஐஸ்வர்யா ராய், சந்தானம், கருணாஸ் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகி வெற்றி பெற்ற படம் ‘எந்திரன்’. இந்த படத்தின் கதை தன்னுடையது என்று எழுத்தாளர் ஆரூர் தமிழ்நாடன் கடந்த 2010 ஆம் ஆண்டு சிவில் வழக்கும், காப்புரிமையை மீறியதாக ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கேட்டு மற்றொரு வழக்கையும் உயர் நீதிமன்றில் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று இயக்குநர் சங்கர் மற்றும் தயாரிப்பாளர் கலாநிதி மாறன் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் இந்த வழக்கை விசாரணை செய்ய தடை விதிக்க முடியாது என்று மறுத்துவிட்ட சென்னை உயர் நீதிமன்றம், தொடர்ந்து விசாரிக்க உத்தரவிட்டது.

கடந்த 10 வருடங்களாக சென்னை உயர் நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில், 2019 ஆம் ஆண்டு தீர்ப்பு வழக்கப்பட்டது. அதில், கலாநிதிமாறன் மீது எழுத்தாளர் ஆரூர் தமிழ்நாடன் தொடுத்த வழக்கு செல்லாது எனவும், இயக்குநர் சங்கர் மீது காப்புரிமைச் சட்டத்தின் கீழ் இந்த வழக்கை நடத்த முகாந்திரம் உள்ளது என்றும் கூறிய நீதிமன்றம், கதை ஒரே மாதிரி இருப்பதாகக் கூறி கதைக்கும் சினிமாவுக்கும் உள்ள 16 ஒற்றுமைகளை பட்டியலிட்டுக் காட்டி அதன் மூலம் காப்புரிமை மீறல் அப்பட்டமாக தெரிகிறது. அதனால், எழும்பூர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட சங்கருக்கு எதிரான வழக்கை காப்புரிமை சட்டப்படி தொடர்ந்து நடத்தலாம் என்று உத்தரவிட்டது.

இந்த நிலையில், எழும்பூர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது முறைப்பாடு வழங்கியவர் ஆரூர் தமிழ் நாடன் நேரில் ஆஜர் ஆகி வழக்கு விசாரணைக்குத் தயாராக இருப்பதாக வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் தெரிவித்தார். ஆனால், இயக்குநர் சங்கர் எழும்பூர் நீதிமன்றத்தில் இந்த வழக்கில் ஆஜராகவில்லை.

இதையடுத்து எழும்பூர் பெருநகர் 2 ஆவது மாஜிஸ்திரேட் இயக்குநர் சங்கருக்குப் பிடியாணை பிறப்பித்தார். மேலும் பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் விசாரணைகளை ஆரம்பிக்க உள்ளதாகவும் அறிவித்தார். இந்த வழக்கில் கடந்த 11 ஆண்டுகளாக இயக்குநர் சங்கர் நேரில் ஆஜராகவில்லை என்ற முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு விஞ்ஞானிகள், வைத்தியர்கள் எமிரேட்ஸில் குடியுரிமை; துணை அதிபர் உத்தரவு

முதலீட்டாளர்கள், விஞ்ஞானிகள் உள்ளிட்ட சிறப்புத் தகுதி கொண்டவர்கள், பொறியியலாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்கள் உள்ளிட்டோர் எமிரேட் குடியுரிமை பெறும் வகையில் விதிமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எமிரேட்ஸின் துணை அதிபரும், பிரதமரும், டுபாய் ஆட்சியாளருமான ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் நேற்று தனது டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

இதன் மூலம் எமிரேட்ஸின் பொருளாதார வளர்ச்சிப் பயணத்தில் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் தங்களது பங்களிப்பைச் செலுத்த உதவியாக இருக்கும். அவர்கள் அமீரக குடியுரிமை பெறுவதோடு மட்டுமல்லாமல் தாங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களோ அந்த நாட்டின் குடியுரிமையையும் வைத்துக்கொள்ளலாம்.

அமீரக அதிபர் ஷேக் கலீபா பின் ஜாயித் அல் நஹ்யான் வழிகாட்டுதலின் பேரில் எமிரேட் அமைச்சரவை இந்த விதிமுறைகள் மாற்றத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இத்தகைய தகுதி கொண்டவர்களை எமிரேட்ஸின் குடியுரிமை பெறுவதற்கு எமிரேட் அமைச்சரவை, ஆட்சியாளர் அலுவலகம் மற்றும் நிர்வாக கவுன்ஸில் உள்ளிட்டவை பரிந்துரை செய்ய முடியும். ஒவ்வொரு பிரிவினருக்கும் குடியுரிமை பெறுவதற்கு என்னென்ன தகுதிகள் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டைச் சேர்ந்த தகுதியுடையோருக்கு குடியுரிமை வழங்குவதன் மூலம் அவர்களது அனுபவங்கள் எமிரேட்ஸின் வளர்ச்சிக்கு பயனளிக்கும் வகையில் இருக்கும்.

–இவ்வாறு அவர் அதில் பதிவிட்டுள்ளார்.

இந்த புதிய விதிமுறையின் மூலம் எமிரேட்ஸின் குடியுரிமை பெற முதலீட்டாளர்கள் விண்ணப்பிக்க விரும்பினால் அவர்களது பெயரில் எமிரேட்ஸில் சொத்துகள் இருக்க வேண்டும். வைத்தியர்கள் தாங்கள் எந்த துறையில் அனுபவம் பெற்றுள்ளனர் என்பதுடன், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்கின்றமையுடன், தங்களது தொழில் தொடர்பான அமைப்பு ஒன்றில் உறுப்பினராகப் பதவி வகிக்க வேண்டும்.

விஞ்ஞானிகள் பல்கலைக்கழகம் அல்லது தனியார் ஆராய்ச்சி மையத்தில் வேலை செய்து வர வேண்டும். 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்கின்றமையுடன், சர்வதேச அமைப்பின் பரிந்துரையும் இருக்க வேண்டும்.எமிரேட் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் குடியுரிமை பெறுவது மிகவும் அரிது. இத்தகைய சூழ்நிலையில் அமீரக அரசின் இந்த அறிவிப்பு முதலீட்டாளர்கள், வைத்தியர்கள், விஞ்ஞானிகள் உள்ளிட்டோரிடம் பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# போலியோ சொட்டு மருந்து முகாம் ஆரம்பம் தமிழகம் முழுவதும் 43 ஆயிரம் மையங்கள்



இந்தியா முழுவதும் இன்று போலியோ சொட்டு மருந்து முகாம் தொடங்கியது. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பாடசாலைகள் என 43 ஆயிரத்து 51 மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. இதேபோல் பயணத்தில் இருக்கும் குழந்தைகளின் வசதிக்காக பஸ், ரயில் மற்றும் விமான நிலையங்கள், சோதனைச்சாவடி களிலும், போலியோ சொட்டு மருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியில் சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் என 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்படுகின்றனர். போலியோ சொட்டு மருந்து வழங்குமாறு தனியார் மருத்துவமனைகள் மற்றும் வைத்தியர்களுக்கும் சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

தமிழகத்தில் உள்ள 5 வயதுக்கு உட்பட்ட 70.20 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

சென்னையை பொறுத்தவரை 5 வயதிற்கு உட்பட்ட சுமார் 6.84 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்கு 1,644 மையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

6 ஆயிரத்து 700 பேர் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு கண்டிப்பாகப் போலியோ சொட்டு மருந்து போட வேண்டும் என சுகாதாரத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

# இந்திய கிரிக்கெட் வீரர் நடராஜன் பழனி முருகன் கோயிலில் தரிசனம்



சேலம் மாவட்டம், சின்னப்பம்பட்டியைச் சேர்ந்த நடராஜன் இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பிடித்து அசத்தினார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் மூன்று வடிவ போட்டிகளிலும் அறிமுகம் ஆகி அசத்தலாக பந்து வீசினார். ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சமீபத்தில் தாயகம் திரும்பிய நடராஜனுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையில், பழனி தைப்பூச விழாவில் முருகப் பெருமானைத் தரிசிக்க நண்பர்களுடன் நேற்று பழனி வந்தார்.பழனி மலைக்கோயிலுக்குச் சென்ற கிரிக்கெட் வீரர் நடராஜன், நேர்த்திக் கடனாக மலைக்கோயில் அடிவாரத்தில் முடிக் காணிக்கை செலுத்தினார்.



# காஷ்மீரில் மீண்டும் படப்பிடிப்பு ஆர்வம் காட்டும் திரையுலகம்

காஷ்மீரில் பனிமூடிக் கிடக்கும் ரம்மியமான சூழலில் மீண்டும் அங்கு பொலிவுட் படப்பிடிப்புகளை நடத்துவது தொடர்பாகத் தயாரிப்பாளர்கள் காஷ்மீரின் சுற்றுலா நிறுவனங்களுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

1960 மற்றும் 70களில் சினிமா கறுப்பு வெள்ளையில் இருந்து வண்ணத்திற்கு மாறிய போது ஏராளமான இந்தி மற்றும் தமிழ்ப்படங்கள் காஷ்மீரில் படமாக்கப்பட்டன.

இந்திப் படங்களின் சொர்க்க பூமியாக இருந்த காஷ்மீரில் தீவிரவாதத்தால் ஏற்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக படப்பிடிப்புகள் நிறுத்தப்பட்டன. தற்போதைய பாதுகாப்பு சூழல்மாறியுள்ளமையுடன் இயற்கையும் அழகை வாரியிறைத்துள்ளதால் அங்குள்ள படகு சவாரி, ஏரிகளில் மீண்டும் படப் பிடிப்பு நடத்த பாலிவுட் தயாரிப்பாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

# ஜன.26 இல் நடந்த சம்பவம்; நாடே அதிர்ச்சி அடைந்தது!

## பிரதமர் மோடி தெரிவிப்பு



வேளாண் சட்டங்களுக்கு எதிராக டெல்லியின் பல்வேறு எல்லைப்பகுதிகளில் விவசாயிகள் தொடர்ந்தும் போராட்டம் நடத்துகின்றனர். இரண்டு மாதங்களாக அமைதியான முறையில் போராடிய நிலையில், குடியரசு தினத்தன்று நடந்த டிராக்டர் பேரணியில் ஏற்பட்ட வன்முறையானது போராட்டத்தின் கரும்புள்ளியாக அமைந்துவிட்டது.


பேரணிக்கான பாதையில் இருந்து விலகிய ஒரு குழுவினர், டெல்லி செங்கோட்டையில் நுழைந்து, வன்முறையில் ஈடுபட்டமையுடன், அங்கிருந்த கொடிக்கம்பத்தில் தங்கள் அமைப்புகளின் கொடியை ஏற்றினர். விவசாயிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இரு தரப்பிலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், இந்த ஆண்டின் முதல் ‘மன் கி பாத்’ வானொலி நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, ஜனவரி 26 ஆம் திகதி செங்கோட்டையில் நடந்த வன்முறை மற்றும் தேசியக்கொடி அவமதிப்பைக் கண்டு நாடே அதிர்ச்சி அடைந்தது எனக் குறிப்பிட்டார். நாம் வரும் நாள்களை நம்பிக்கையுடனும் புதுமையுடனும் நிரப்ப வேண்டும் என்றும் அவர் கூறினார்.

விவசாயத்தை நவீனமயமாக்குவதற்கும், அதற்காக பல நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. அரசாங்கத்தின் முயற்சிகள் எதிர்காலத்திலும் தொடரும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# உருமாறிய மூன்று வகை கொரோனா 14 நாடுகளில் பரவலடைந்துள்ளது!

## ஐ.நா. எச்சரிக்கை



14 நாடுகளில் பரவியுள்ள 3 புதிய வகை கொரோனா வைரஸால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று ஐ.நா. சபை எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக ஐ.நா. சபையின் அங்கமான பாஹோ என்று அழைக்கப்படுகின்ற பான் அமெரிக்க சுகாதார அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில், தற்போது உருமாறிய 3 வகை கொரோனா வைரஸ், 14 நாடுகளில் பரவியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதில் இங்கிலாந்து நாட்டிலும், தென்னாபிரிக்காவிலும் கண்டறியப்பட்டவை இரு வகை கொரோனா வைரஸ் என்றும், மூன்றாவது வகை வைரஸ், பிரேஸில் நாட்டின் அமேசனோஸ் மாகாணத்தில் கண்டறியப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

சீனாவில் இருந்து வந்த கொரோனா வைரஸை விட உருமாறிய கொரோனா அதிக மரண ஆபத்தை ஏற்படுத்துவதாகவும் எச்சரித்துள்ளது.

# இந்தியாவிடமிருந்து கொரோனாத் தடுப்பூசி பெறவுள்ளதாக மெக்ஸிக்கோ அதிபர் தகவல்



இந்தியாவிடமிருந்து Astra-Zeneca வின் கொரோனாத் தடுப்பூசி மருந்துகளை பெறுவோம் என மெக்ஸிக்கோ அரசு தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதம் இந்தியாவில் இருந்து சுமார் 8 லட்சத்து 70 ஆயிரம் டோஸ் கொரோனாத் தடுப்பூசியை இறக்குமதி செய்யவும், தடுப்பூசி மருந்துகளை உள்நாட்டில் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளார் எனவும் மெக்ஸிக்கோ அதிபர் ஆண்ட்ரஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர் தெரிவித்துள்ளார்.

இதற்காக மெக்ஸிக்கோ AstraZeneca நிறுவனத்திடம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதேவேளை, பெப்ரவரி 10 ஆம் திகதி முதல் மெக்ஸிக்கோவில் பைஸர் நிறுவனத்தின் தடுப்பூசி விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகாத்மா காந்தியின் சிலை சேதம் அமெரிக்காவில் மர்ம நபர்கள் கைவரிசை



மகாத்மா காந்தியின் 74வது நினைவு நாள் நேற்று அனுஷ்டிக்கப்படும் நிலையில், அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள காந்தியின் திருவுருவச் சிலை மர்ம நபர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு கலிபோர்னியாவின் டேவிஸ் நகரில் அமைந்துள்ள பூங்காவில் 6 அடி உயரத்தில் காந்தியின் வெண்கலச் சிலை நிறுவப்பட்டிருந்தது.

இந்நிலையில், சிலையின் முகம் மற்றும் கால் பகுதி அடையாளம் தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட்டமையை அடுத்து காந்தியின் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது.

# இறந்த தனது தாயின் உடலை 10 ஆண்டுகளாக குளிர்சாதனப் பெட்டியில் மறைத்து வைத்த மகள்!

ஜப்பானில் இறந்த தனது தாயின் உடலை யாருக்கும் தெரியாமல் பத்து ஆண்டு காலமாக குளிர்சாதனப் பெட்டியில் மறைத்து வைத்திருந்த மகளைப் பொலிஸார் கைது செய்தனர்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 48 வயதான பெண் யூமி யோஷினோ. அவரும், அவரது தாயாரும் தலைநகர் டோக்கியோவில் உள்ள ஓர் அடுக்கு மாடி குடியிருப்பில் நீண்ட காலமாக வசித்து வந்தனர். கடந்த 10 வருடத்திற்கு முன்னதாக யூமி யோஷினோவின் தாய் இறந்தார். ஆனால் நீண்ட காலமாக தாயுடன் சேர்ந்து வசித்து வந்த அந்த குடியிருப்பில் இருந்து யூமி வெளியேற விரும்பாதமையால் தனது தாயின் உடலை குளிர்சாதன பெட்டியில் வைத்து மறைத்து அடுக்குமாடி குடியிருப்பில் அக்கம்பக்கத்து வீட்டில் வசிப்பவர்கள் யாருக்கும் தெரியாமல் பாதுகாத்து வந்தார்.

கொரோனா ஊரடங்கு காரணமாக வேலை யிழந்த யூமி, தான் வசித்து வரும் வீட்டுக்கு சில மாதங்களாக வாடகை கொடுக்கவில்லை. அதனால் அவர் வீட்டை விட்டு வெளியேறும்படி வற்புறுத்தப்பட்டார். அதன்படி இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் வீட்டை விட்டு வெளியேறினார். ஆனால் 10 ஆண்டுகளாக குளிர்சாதனப் பெட்டியில் மறைத்து வைத்திருக்கும் தாயின் உடலை எடுத்து சென்றால் பொலிஸிடம் மாட்டிக்கொள்வோம் என்ற அச்சத்தில் எடுத்து செல்லவில்லை. சில நாள்களுக்கு முன் யூமி வெளியேறிய வீட்டை தூய்மைப்படுத்த வந்த பணியாளர், வீட்டின் குளிர்சாதனப் பெட்டியில் இறந்த வயதான பெண்மணியின் உடல் ஒன்று வளைத்து வைக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். இது தொடர்பாக காவல் துறையினருக்கும் தகவல் கொடுத்தார். உடலைக் கைப்பற்றிய காவல்துறையினர் பிரேத பரிசோதனைக்கும் அனுப்பி வைத்தனர்.

பத்தாண்டு காலமாக குளிர்சாதனப் பெட்டியிலேயே யூமியின் தாயாரின் உடல் வைக்கப்பட்டிருந்தமையால் அவர் இறந்த சரியான நேரம் மற்றும் இறந்தமைக்கான காரணத்தை அறிய முடியவில்லை என்று காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். மேலும் தாயின் உடலை மறைத்து வைத்திருந்த யூமி யோஷினோவை காவல்துறையினர் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

பெற்ற தாயின் இறந்த உடலை யாருக்கும் தெரியாமல் பத்து வருடமாக குளிர்சாதனப் பெட்டியில் அவரது மகளே மறைத்து வைத்திருந்த சம்பவம் பலரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

# கியூபாவில் ராணுவ ஹெலிக்கொப்டர் விபத்து பயணித்த ஐந்து வீரர்களும் உயிரிழப்பு!



கியூபாவில் மலைக் குன்றின் மீது இராணுவ ஹெலிக்கொப்டர் மோதி விபத்துக்குள்ளானதில் 5 வீரர்கள் உயிரிழந்தனர்.

ஹோல்குன் மாகாணத்தில் இருந்து கிளம்பிய அந்த ஹெலிக்கொப்டர் சிறிது நேரத்தில் அதன் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது.

இதையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் அருகிலுள்ள ஒரு மலையின் மீது ஹெலிக்கொப்டர் மோதி விபத்துக்குள்ளானமை கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விபத்தில் ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த 5 இராணுவ வீரர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

# இந்தியாவுடன் ட்ரம்ப் வகுத்த கொள்கையை தொடர்ந்து பேண ஜோ பைடன் அரசு முடிவு!

இந்தியா உள்ளிட்ட இந்தோ – பசுபிக் நாடுகளுடனான உறவு தொடரும் என்றும், முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அரசின் கொள்கைகளை தொடர உள்ளார் என அமெரிக்காவின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுலிவான் கூறியுள்ளார்.



அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா அடங்கிய, 'குவாட்' எனப்படும் கூட்டமைப்பு, 2017 இல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில், சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும்வகையில், இந்த கூட்டமைப்பு, போர் பயிற்சிகளில் ஈடுபட்டு உள்ளது. பல்வேறு துறைகளிலும், இந்த நாடுகள் இணைந்து செயலாற்றி வருகின்றன.

இந்தோ – பசுபிக் பிராந்தியம் தொடர்பாக, புதிய அதிபர் ஜோ பைடனின் நிர்வாகத்தின் கொள்கை, இந்த கூட்டமைப்பின் அடிப்படையிலேயே இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கனடா பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் அதிகரிப்பு

## கொரோனாவால் புதிதாக நடவடிக்கை

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கனடா வரும் பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடாபாக செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, கனடாவிற்கு வரும் பயணிகள் மூன்று நாட்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்றார். அதன் பின் அவர்கள் சொந்த செலவில் கொரோனா பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



சோதனையின் போது எதிர்மறையாக முடிவு வந்தால், அவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும், நேர்மறையான முடிவு வந்தால், அவர்கள் அரசாங்கம் தனிமைப்படுத்தும் இடத்துக்கு மாற்றப்படுவர் என்றும் அவர் கூறினார். மெக்ஸிகோ, கரீபியன் நாடுகளுடனான விமானப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# 126 ஆண்டுகள் பழைமையான சிவன் கோவில் புனரமைப்பின் பின் பாகிஸ்தானில் திறப்பு



பாகிஸ்தானில் உள்ள ஐதராபாத் நகரத்தில் 126 ஆண்டுகள் பழைமையான சிவன் கோவில் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் சிறுபான்மையினராகக் கருதப்படும் இந்து மக்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள ஐதராபாத் நகரத்தில் அமைந்துள்ள, 126 ஆண்டுகள் பழைமையான சிவன் கோவில் புனரமைக்கப்பட்டுள்ளது. பின்னர், பக்தர்களின் வழிபாட்டுக்காகக் கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் கோயில் திறக்கப்பட்டது. கோவிலுக்குப் பக்தர்கள் வந்து செல்ல ஏதுவாக, கோவிலைச் சுற்றிலும் உள்ள ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், பாகிஸ்தான் முழுவதும் பல இந்து கோவில்கள் சமீபத்தில் புனரமைக்கப்பட்டுள்ளன எனவும், அவற்றில், சியால்கோட்டில் உள்ள ஆயிரம் ஆண்டுகள் பழைமையான ஷாவல தேஜா கோவிலும் அடங்கும் என்றும் கூறினார். மேலும், புனரமைக்கப்பட்ட இந்தக் கோவிலை நிர்வகிக்கும் பொறுப்பு உள்ளூர் இந்து அமைப்பிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானின் மொத்த மக்கள் தொகையில் 90 சதவிகிதமானோர் இஸ்லாமியர்களாக இருந்தாலும் பாகிஸ்தானில் மிகப்பெரிய சிறுபான்மையினராக இந்துக்களே கருதப்படுகின்றனர். இந்த நாட்டில் சுமார் 75 லட்சம் இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர் என அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# குருந்தூர்மலை தமிழர் வழிபாட்டு உடைப்பு: இரு வழக்குகளைத்; தாக்கல் செய்ய முடிவு!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு





முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையிலிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமலாக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் எனத் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, அவரோடு சேர்ந்தவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றையும் தொடரவுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருந்தூர் மலையில் தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக வழக்கொன்றைத் தொடர்வது தொடர்பாக, வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் சனிக்கிழமை சுமந்திரனுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

இந்தச் சந்திப்பு, வவுனியாவிலுள்ள தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் இடம்பெற்றதுடன், வழக்குத் தொடர்வதற்காக சில ஆவணங்களும் சுமந்திரனிடம் கையளிக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன் –

குருந்தூர் மலையில் இருந்த சூலம் உடைக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக துரைராசா ரவிகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சார்ள்ஸ் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்ட பின்பு, ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து சனிக்கிழமை பொலிஸாரோடு குருந்தூர் மலைக்குப்போய் உடைக்கப்பட்ட தடயங்கள் எல்லாவற்றையும் ரவிகரன் காண்பித்துள்ளார். இதையடுத்து, அங்கிருந்த தமிழர்களின் வழிபாட்டு இடம் உடைக்கப்பட்டமை ஊர்ஜிதமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றை நாங்கள் தாக்கல் செய்யவுள்ளோம்.

ஏற்கனவே, முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட உத்தரவை மீறிச் செயற்பட்டமை தொடர்பாக நீதிமன்றை அவமதித்த வழக்கொன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றில் நாங்கள் உடனடியாகத் தாக்கல் செய்வோம். இது இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவிற்கும் அவரோடு சேர்ந்தவர்களுக்கும் எதிராக தாக்கல் செய்யப்படும். - எனத் தெரிவித்துள்ளார்.

# மின் வேலியில் சிக்கி இரு யானைகள் சாவு!

பொலன்னறுவை - மெதிரிகிரிய பகுதியில் சட்டவிரோத மின் வேலியில் சிக்கி இரு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

மெதிரிகிரிய - தாம்வெள பகுதியில் பயிர் நிலமொன்றில் சனிக்கிழமை அதிகாலை இரு யானைகள் சடலமாக மீட்கப்பட்டுள்ளன.



பயிர்செய்கையை வன விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின் வேலியில் சிக்கியே இந்த யானைகள் இரண்டும் உயிரிழந்துள்ளன.

மிருக வைத்திய பிரிவினர் உயிரிழந்த யானைகளின் மரண பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

சட்டவிரோதமான மின் வேலியை அமைத்த நபர் தப்பிச் சென்றுள்ளமையுடன், அவரைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சட்டவிரோத கஜமுத்துக்கள் விற்க முயற்சித்தோர் கைது!

உடப்புஸ்ஸலாவ பகுதியில் சட்டவிரோதமான முறையில் கஜமுத்துக்களை விற்க முற்பட்ட சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

உடப்புஸ்ஸலாவ பகுதியில் கடந்த வியாழக்கிழமை சட்டவிரோதமான முறையில் ஐந்து கஜமுத்துக்களை விற்க முயற்சித்த சந்தேக நபர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை மற்றும் மெதிரிகிரிய பகுதியைச் சேர்ந்த நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஜீப் ரக வாகனம், மோட்டார் சைக்கிள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

உடப்புஸ்ஸலாவ பொலிஸார் சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# துறைமுக சேவையும் அத்தியாவசிய சேவை!

## பிரகடனப்படுத்தினார் கோட்டா

இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார்.

அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக ஜனாதிபதி துறைமுக சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் கையெழுத்துடன் இந்த வர்த்தமானி சனிக்கிழமை வெளியிடப்பட்டது.




# ட்ரோன்கள், பட்டங்கள் பறக்கவிடவேண்டாம் விமானப்படை பொதுமக்களிடம் கோரிக்கை!

கொழும்பு, ஜன.31

கொழும்பில் 73 ஆவது சுதந்திர தினமான எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி வரையில், பட்டங்கள், பலூன்கள், ட்ரோன் கெமராக்கள் போன்றவற்றை பறக்க விட வேண்டாம் என விமானப்படை பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஒத்திகைகள் இந்நாள்களில் இடம்பெற்று வரும் நிலையில், விமானங்கள் தாழ்வாகப் பறக்க நேரும் என்பதால், இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாக விமானப்படை பேச்சாளர் குறூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

பட்டங்கள், பலூன்கள், ட்ரோன்கள் என்பவை தாழ்வாகப் பறந்து ஒத்திகையில் ஈடுபடும் விமானங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் அச்சுறுத்தல் இருப்பதாலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# யாழ். போதனா வைத்தியசாலையில் 3,000 பேருக்கு கொரோனா தடுப்பூசி!

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தகவல்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 3 ஆயிரம் பேருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார் .

சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சி கல்லூரியிலும் குறித்த செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது வரை 400 சுகாதார சேவையாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

அதேபோல், யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார பணியாளர்கள், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள சுகாதார சேவையாளர்கள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார சேவையாளர்கள் உட்பட 3 ஆயிரம் பேருக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரைமாதமஞ்சள்கன்றுகள்யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.01.2021இல் வெளியிடப்பெற்றது.